# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 90/நகராட்சி/2018**

**நாள் : 22/11/2018**

**திரு P. விஜயசாரதி,**
**தாம்பரம்.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**தாம்பரம் நகராட்சி,**
**தாம்பரம்.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, கிழக்குத் தாம்பரம், இரும்புலியூர், லேக்வியூ தெரு, எண்.4 என்ற முகவரியில் வசிக்கும் திரு P. விஜயசாரதி அவர்களின் 24.04.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.04.2018 அன்று பெறப்பட்டு 90/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை வாக்குமூலங்கள் மற்றும் நகராட்சி ஆணையரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, கிழக்குத் தாம்பரம், இரும்புலியூர், லேக்வியூ தெரு, எண்.4 என்ற முகவரியில் வசிக்கும் திரு P. விஜயசாரதி என்பவர், தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட 27–வது வார்டு அருள்நகர், அருள்நகர் பூங்கா அமைத்ததில் முறைகேடுகள் நடந்திருக்கக்கூடும் என ஐயுற்று கீழ்க்காணும் பணிகள் சம்பந்தமாக விசாரணை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்:-

(1) மழைக்காலங்களில் பூங்காவில் தண்ணீர் தேங்கி நிற்பது ;

(2) நகராட்சியின் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்த குப்பைக் கலன், பறவை மற்றும் விலங்குகளின் உருவ பொம்மைகள் பூங்காவில் அமைக்கப்படாதது.

2. முறையீட்டு மனுதாரரின் மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. அருள் நகர் பூங்கா அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள 2015–16 ஆம் ஆண்டில் “AMRUT”திட்டத்தின் கீழ் ரூபாய்64 லட்சம் நிதி ஒதுக்கீடு பெற்று, நகராட்சி நிர்வாக ஆணையரகத் தலைமைப் பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன என நகராட்சி ஆணையர் தனது 11.06.2018 நாளிட்ட கடித்தில் தெரிவித்துள்ளார். 09.08.2016 நாளிட்ட பணி ஆணையில் திருவாளர்கள் பாஸ்கரன் நர்ஸரி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு மன்ற ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். பூங்கா அபிவிருத்தித் திட்ட மதிப்பீட்டில் பறவைகள் மற்றும் உருவ பொம்மைகள் வைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பினும், சூழ்நிலைகளுக்கேற்ப பணியில் சிறு மாறுதல்கள் செய்யும் நிலை ஏற்பட்டது என்றும், அமைக்கப்படவிருந்த உருவ பொம்மைகள் இரசாயனக் கலவையுடன் Fibre–இல் செய்ய செய்யப்பட்டிருந்ததால் அவைகள் நிலத்தின் மண் தன்மையினை மாசு படுத்தும் என்ற அறிவுரைகள் ஏற்கப்பட்டு, அப்பொம்மைகள் அமைக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் 13.06.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், 22.09.2017 நாளிட்ட கடிதத்தில் வழங்கப்பட்ட பதிலில், பறவைகள் மற்றும் விலங்குகள் உருவ பொம்மைகள் அமைக்க திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது என்றும், ஆனால் 30.10.2017 நாளிட்ட கடிதத்தில் தகவல் அளிக்கும் மேல்முறையீட்டு அலுவலர் விலங்குகள் மற்றும் பறவைகளின் உருவ பொம்மைகள் இல்லை எனத் தெரிவித்துள்ள முரண்பட்ட தகவலினால் பூங்கா அமைக்கும்பணியில் முறைகேடுகள் நடந்திருக்கக் கூடும் எனத் தான் நம்புவதாக முறையீட்டு மனுதாரர் விசாரணையின்போது தெரிவித்தார். பணி ஆணையின் நகல் தனக்கு வழங்கப்பட்டிருந்தால் என்ன தவறுகள் நடந்திருக்கும் எனத் தன்னால் அறிந்திருக்க இயலும் என்றும் விசாரணையின்போது தெரிவித்தார்.

4. தாம்பரம் நகராட்சி ஆணையாளரிடம் 17.10.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. பூங்கா அமைப்பதற்கு நிதி உதவி வழங்கிய TUFIDCO நிறுவனம் தல ஆய்வின் போது உருவ பொம்மைகள் பயன்படுத்த வேண்டாம் எனத் தெரிவித்ததால் அப்பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்தார். மேலும், ஒப்பந்தப்புள்ளி பணி ஆணை பெற்ற திருவாளர்கள் பாஸ்கரன் நர்சரியின் நிறுவனர், முறையீட்டு மனுதாரருக்கு பிடிக்காத காரணத்தினால் கோபமுற்று அவருக்கு வழங்கிய இந்த ஒப்பந்தத்தைக் குறை கூறி முறையீட்டு மனுதாரர் மனுச் செய்துள்ளார் என்றும் விசாரணையின்போது நகராட்சி ஆணையர் தெரிவித்தார்.

5. நகராட்சி ஆணையர் விசாரணையின்போது தாம்பரம், அருள்நகர் பூங்கா அபிவிருத்திப் பணிகள் ரூபாய் 64 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டது சம்பந்தமாக, பணி இறுதி அறிக்கையினை (Completion report) சமர்ப்பித்தார். அவ்வறிக்கையினை ஆய்வு செய்ததில் “Fixing of fibre birds and animal monuments” என்ற தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 80,000/– பயன்படுத்தப்படவில்லை. அபிவிருத்திப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட சில இனங்களுக்கென தொகைகளில் கூட்டியும் குறைத்தும் மாற்றுப்பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என அறிய முடிகிறது. ரூபாய் 64 லட்சம் நிதி ஒதுக்கீடுக்கும் கூடுதலான தொகை ரூ.2,40,435/– செலவு செய்யப்பட்டு, ரூ.66,40,435/– மதிப்பீட்டில் பூங்கா அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அறிய முடிகிறது. எனவே, முறையீட்டு மனுதாரர் தெரிவித்த குற்றச்சாட்டில் உண்மைத் தன்மை இல்லை என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனினும்,

பூங்காவில் மழைநீர் தேங்காமல் இருப்பதை உறுதி செய்வதுடன், குப்பைக் கழிவுகள் போடுவதற்கு ஏதுவாக குப்பைத் தொட்டிகள் அமைத்து பூங்காவினை சுத்தமாகப் பராமரிக்கும்படியும் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2018**– ஆம் ஆண்டு, **நவம்பர்** திங்கள், **22**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் ★ சென்னை–600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

6/12/2018

செயலாளர்.

30.11.18

30/11/18

பெறுநர்

1. திரு P. விஜயசாரதி,
   எண்.4, லேக் வியூ தெரு,
   இரும்புலியூர்,
   கிழக்கு தாம்பரம்,
   சென்னை – 600 059.

2. நகராட்சி ஆணையர்,
   தாம்பரம் நகராட்சி,
   சென்னை – 600 045.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி